# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059    416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை    மாதமிருமுறை    இலவசம்



வீடு விற்க,வாங்க...

**Raja M. Mahendran, P. Eng.**

(Sales Rep.)




இன்றைய சேவையே
நாளைய வெற்றி!

CELL: 416.315.9397
Pager: 416.589.4270



நதி 13    APRIL 15, 2003    பாலம் 08


நாம் அனைவரும் போராட்டங்கள் நிறைந்த உலகத்தில் வாழுகின்றோம், போராட்டங்கள் மனித வாழ்க்கைக்கு ஆணிவேர் போன்றது. போராட்டமின்றி மனித முன்னேற்றமே கிடையாது. போராட்டம் பல தரப்பட்டது. அது உள் மனத்திற்கும், வெளி மனத்துக்கும் இடையேயும் இருக்கலாம். உள் மனத்திற்கும் வெளி மனத்துக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் நாம் வெற்றி பெற்றால் பல வேண்டாத விடயங்களிலிருந்து விடுதலை பெற்றுவிடுவோம். மனமும் திருந்தி விடும். புதிய முயற்சிகளுக்கும் திட்டங்களுக்கும் நாம் நம்மைத் தயார் செய்து கொள்வோம். நமக்கு ஏற்படும் ஒவ்வொரு அனுபவமும் ஒரு புதிய போராட்டத்திற்கு ஆரம்பமாக இருக்கும். அது நம் வாழ்க்கையில் போராட்டத்துக்கு ஆரம்பமாக இருக்கும். நம் வாழ்க்கையில் போராட்டத்துக்கு முடிவே இல்லை. கஷ்டத்தை நாம் எதிர்த்து நிற்கும் போதெல்லாம் அதை நாம் எதிர்த்து நின்றே ஆக வேண்டும். ஏனெனில் மனிதன் போராடுவதற்காகவே பிறந்தவன்.

## அருள்விருந்து

* வழுக்குப் பாதையின் மீது எச்சரிக்கையாக நடக்கவேண்டும். இல்லையேல் வழுக்கிக் கீழே விழ நேரிடும். நன்நெறியில் ஒழுகுபவன் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் இல்லையேல் நெறி பிறழ நேரிடும்.

* கடவுள் எல்லாரிடத்திலும் பேசுகிறார். ஆனால் நாம் காதை அடைத்துக் கொண்டு அவருக்குச் செவிசாய்ப்பதில்லை. கடவுள் எல்லார்க்கும் காட்சியளிக்கிறார். ஆனால் நாம் கண்ணை மூடிக் கொண்டு அவரைக் காண்பதில்லை.

## தன்மானம

**பணம் படுத்தும் பாடு**

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்று சொல்லி வைத்தாலும் வைத்தார்கள், ஆனால் பணப் பேய்களாக மாறிவிட்ட மனித இனம் மனித நேயத்தை மறந்து இரத்தக் கடலில் குளித்து திரவியம் தேடும் நிலைக்கு வந்து விட்டது. ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த போர் இதனையே எடுத்துக் காட்டுகிறது. ஆரம்ப காலங்களில் திரவியம் தேடப் புறப்பட்டவர்கள் வேற்று நாடுகளுக்குள் புகுந்து கொள்ளையடித்ததுடன் மட்டும் நின்றுவிடாமல் தமது மதங்களையும் கலா சாரங்களையும் பலாத்காரமாக மக்கள் மீது திணித்தனர். மனித நேயத்தை வளர்க்க உருவான மதங்களை பரப்ப, பணம் என்ற எச்சில் இலைகளை காட்டியதன் விளைவுகளை மனித-இனம் இன்று அனுபவிக் கின்றது. ஓர் இனத்துக்குள் பல மதங்கள், ஒரு மதத்திற்குள் பல பிரிவுகள். விளைவு? மனித உயிர்ப் பலிகள். திரைகடல் ஓடித் திரவியம் தேடியவர்கள் மனித இனத்திற்குச் செய்த கைங்கரியம் இது தான்.

**யார் இந்த அமெரிக்கர்கள்?**

வெள்ளையர்களா? கறுப்பர்களா? சீனர்களா? அராபியர்களா? இந்தியர்களா? தமிழர்களா? சிங்களவர்களா? யார் இவர்கள்? உலகின் பல பாகங்களில் இருந்தும் பணமே கனவாக பெற்ற தாய் தந்தை, உறவுகள், பிறந்தமண், பந்த பாசங்களைத் துறந்து வந்தவர்களுடன் அடிமைகளாகவும், ஆண்டிகளாகவும் நாதி அற்றவர்களாகவும் வந்தவர்கள் தான் இன்று அமெரிக்காவில் வாழும் அமெரிக்கர்கள். அவர்களுக்கு இன்று இருப்பதெல்லாம் ஒரே கனவு, பொதுவான கனவு, அமெரிக்க கனவு என்ற பெயரில் பணம் பண்ணுவதே கனவு.

**ஜனநாயகம்**

நாம் மட்டும் வாழ்ந்தால் போதும் மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன என்பதையே கொள்கையாக கொண்ட அமெரிக்கர்கள் தாம் வாழ்வதற்காக ஜனநாயக அரசியலையும், பத்திரிகை, கருத்துச் சுதந்திரங்களையும் தமது நாட்டுக்குள் பேணிப் பாதுகாத்து வருவதுடன் காலத்துக்குக் காலம் பணத்தை காட்டி மற்றைய நாடுகளில் வாழ்கின்ற படித்த பிச்சைகாரர்களை தமது நாட்டிற்கு குடிபெயர வைத்து தமது நாட்டைக் கட்டி எழுப்புவார்கள். அதேவேளை மற்றைய நாடுகளில் குலத்தைக் கெடுக்கும் கோடாரிக் காம்புகளை உருவாக்குவதன் மூலம் ஜனநாயகம் கெடவும் அழிவுகள் உருவாகவும் வழி வகுத்து ஆயுத விற்பனை என்ற பேரில் பணம் பண்ணுவார்கள்.

**பயங்கரவாதம்**

ஈரான் நாட்டிற்குள் எண்ணெய்க் கிணறுகளை சுரண்டுவதற்கு விழுந்த தடையினால் ஏற்பட்ட கோபத்தில், அயத்தோலா கோமேனிகளுக்கு பாடம் படிப்பிப்பதற்காகவும் அன்றைய காலகட்டத்தில் இன்னுமொரு வல்லரசாக இருந்த சோவியத் யூனியனை ஆப்கானிஸ்தான் நாட்டில் இருந்து வெளியேற்றும் நோக்கத்துடனும் சதாம் உசைன், பின்லாடன் போன்றவர்களை பால் வார்த்து வளர்த்து விட்டதன் மூலம் பயங்கரவாதத்திற்கு உலகம் முழுவதும் வழி வகுத்துக் கொடுத்தார்கள். (தொடர்ச்சி 9ஆம் பக்கம்)


Since 1987

வசந்தா நகை மாளிகை

வசந்தன் - பத்மநாதன்
பத்தர்களின் கைவண்ணத்தில்
தங்கத்தின் புதிய வடிவங்கள்!



TEL: 905 848 5151    FAX: 905 848 8502

OPEN 10:30AM - 8:30PM    MONDAY CLOSED

3025 HURONTARIO ST., UNIT. 103A,
MISSISSAUGA

Singapore Communication

UNLIMITED TALKING*

only $40.00 / m

- 350 Mins Daytime Free
- Evenings & Weekends Free

$30.00 / M

- 100 Mins Daytime Free
- Evenings & Weekends Free
- V/M, C/D*, C/C & C/W FREE
- Lunch Hour (12-1pm)

HURRY ALL PROMOTION ENDS THIS MONTH

OFFICE: 416-740-5292

5010 Steeles Ave. W., Unit 17ABC - (Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை
ஆகிய இடங்களுக்கும்
கடுகதியில் பணம்
அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும்
விசேட தினங்களில் காலை
7am - மாலை 9pm வரை
திறந்திருக்கும். தினமும்
ஆறுகால பூஜைகள்
நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும்
நேரங்கள்

திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480


3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business



416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

FAMILY MEDICAL CENTRE

DR. D. KURUNATHAN

(MBBS, MD, CCFP)

Female Family Physician



Tel: 416.293.7700

880 Ellesmere Rd., #201, Scarborough, ON HOPPER HUT இற்கு அருகாமையில்

# செய்யும் தொழிலில், வெற்றி பெற



கடந்த இதழ் தொடர்ச்சி

அமெரிக்காவில் நடந்த இன்னொரு சம்பவத்தைப் பார்ப்போம்.

ஒரு பேருந்து ஓட்டுனர் எப்போதும் நேர்மையாகவும், நியாயமகாவும், செய்யும் வேலையைக் கவன-மாகவும் செய்பவர். அவரிடம் தொழில் முனைவருக்கான (entrepreneur) திறமையும் கொஞ்சம் உண்டு.

## பெரி. முத்துராமன்

இவருடன் இவருடைய நண்பர் ஒருவரும் அதே நிறுவனத்தில் ஓட்டுனராகப் பணிபுரிந்தார். அவர் முன்னவரைப் போன்று, நேர்மையோ, செய்யும் தொழிலில் அக்கறையோ இல்லாதவர். இருவருமே தொழிற்சங்க உறுப்பினர்கள். இருவருக்கும் ஒரே சம்பளமே.

முன்னவர் நிர்வாகத்துக்குப் பல யோசனைகளைத் தாளில் எழுதி யோசனைப் பெட்டியை நிரப்புவார். பின்னவரோ தொழிற்சங்கக் குறைபெட்டியில் தாளை நிரப்புவார். இருவரின் குணாதிசயங்களும் இவ்வாறு இருக்க, புதிதாகத் திறந்துள்ள நகர்ப்புறக் கடைகளுக்குச் சென்றுவர சரியான வாகன வசதி இல்லை என்று சில பெரியவர்கள் புகார் கூற முன்னவர் கேட்டார். எனவே ஒரு விடுமுறை நாளில் - சனிக்கிழமையில் - 5 பெரியவர்களை $10 வாடகைக்குக் கூட்டிச் சென்று, திரும்பிக் கொண்டு வந்து சேர்த்தார். அதற்கடுத்த சனிக்கிழமையும் இதே பணியைத் தொடர்ந்தார். இப்போது 10 வாடிக்கையாளர்கள் கிடைத்தார்கள். ஒரு மாதத்தில் கடைகளின் நன்மதிப்பையும் பெற்றார். தன்னுடைய தொழிலுக்கு உதவ என்று மைத்துனருரையும் (மச்சான்) சேர்த்துக் கொண்டார். ஆறுமாதத்தில் அவருடைய மனைவியும், குழந்தைகளும் பங்கேற்கக் கூடிய அளவுக்குத் தொழில் வளர்ந்தது. அதே சமயம் சொந்தத்தில் லீஸ் (lease)இற்கு என வானை (van) எடுத்தார். இலாபமாகத் தொழில் நடக்க, ஒரு வருடத்தில் வாடிக்கையளர்களுக்கு நன்றிப் பரிசைக் கொடுத்தார். மூன்று வருடத்தில் தான் வேலை செய்த நிறுவனத்தில், பேரூந்து உரிமையாளரிடம் பேரூந்து சாவியைக் கொடுத்துவிட்டு, மகிழ்ச்சியுடன் தனது சொந்தக் கம்பெனிப் பொறுப்பை முழுநேரமாக ஏற்றார். பின்னவரோ இன்றும் தொழிற்சங்கப் பெட்டியில் குறைகளை நிரப்பிக் கொண்டிருக்கிறார். உலகில் முன்னவரைப் போன்றவர்கள் ஒரு சதவீதம் தான்; பின்னவரைப் போன்றவர்கள் 99 சதவீதம்.

நீங்கள் எந்த ரகம்?

நீங்கள் தொழிலில் வெற்றி பெற்றவர்களா? உங்கள் வெற்றியைப் பற்றி மற்றவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.


திரு. பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu business time மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவருடைய கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தம்முடைய அனுபவத்தையும், அறிவையும் mentoring business நிறுவனத்தின் வாயிலாக வேண்டுவோர்க்கு வழங்குகிறார். இவருடன் தொடர்பு கொள்ள

Tel: 416-335-3381 e-mail: mentoringbusiness@yahoo.ca

கடன்கொடுக்கலாம்! வாங்கலாம்!
Mortgage/loans/line of Credit

* வீடு, வியாபாரம், சுயதொழில் - கடன் பெறலாம்.
* Down Payment ஒரு பிரச்சினையா? தயங்காதீர்கள்.
* 2nd, 3rd மோட்கேஜை - ஒன்றாக்கலாம்.





தொடர்புகளிற்கு:- ஜோஜ் பரந்தாமன்
**416-332-0933**

* வித்தியாசம் அறிய என்னுடனும் தொடர்பு கொள்ளலாம்*.

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**

**வாகன விபத்தா?**

***** 3 Star - Accident Benefit Consultants**



மிகக் கூடிய பண இழப்பீட்டுத் தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய உடன் அழையுங்கள்

J. சந்திரா (416)-708-6069

(தவறு உங்கள் பக்கமாக இருந்தாலும் நீங்கள் வழக்குத் தொடரலாம். வாகனம் செலுத்த முடியாதவர்களுக்கு போக்குவரத்து வசதி செய்து தரப்படும்)

* எங்களிடம் சேவை பெறுபவர்களுக்கு இலவசமாக Traffic Ticket செய்து தரப்படும்.
* Physiotherapy சேவை பெறுபவர்களுக்கு இலவச வாகன வசதி செய்து தரப்படும்.

✓Traffic Tickets ✓Accident Claims ✓Cash settlements

**Toronto** **Mississauga** **Brampton**

INSURANCE

# காப்புறுதி

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

RBC Insurance

## உங்கள் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு நம்பிக்கையான நிறுவனம்

நீங்கள் உங்களை ஆயுட் காப்புறுதி செய்வதன் மூலம் உங்கள் அன்புக்குரியவர்கள் எதிர்காலத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும் தங்கள் உறுதியான வாழ்வைத் தொடரவும் நீங்கள் உதவி செய்கிறீர்கள். ஆயுள் காப்புறுதிகளில் பல வகைகள் உள்ளன. அவை பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

### தவணைக் காப்புறுதி TERM INSURANCE

### நிரந்தர ஆயுட் காப்புறுதி PERMANENT INSURANCE & GUARANTEED PAID UP OPTION WITH CASH VALUE

இந்தத் திட்டத்தின்படி உங்கள் ஆயுட்காலம்வரை திட்டம் நீடிக்கும், கட்டுப்பணம் எக்காலத்திலும் அதிகரிக்காது. இத் திட்டத்தில் நீங்கள் விரும்பியபடி 10, 15 அல்லது 20 வருடங்களில் உங்கள் காப்புறுதிக்கான முழுக் கட்டுப்பணத்தையும் செலுத்தி முடிக்கலாம். அதற்கான உத்தரவாதம் உங்கள் காப்புறுதிப் பத்திரத்தில் எழுத்தில் வழங்கப்படும்.

### வீட்டு அடமானக் காப்புறுதி MORTGAGE INSURANCE

வங்கியின்மூலம் கொடுக்கப்படும் ஈட்டுக் கடனுக்கான காப்புறுதித் திட்டத்திலும் பார்க்க, எங்கள் இலகுவான அடமானக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் உங்கள் விருப்பத்திற்கேற்ப உங்கள் வீட்டு அடமானக் காப்புறுதியை தெரிவு செய்வதால் உள்ள சில நன்மைகள்

* உங்கள் பலன் பெறுபவராக (Beneficiary) உங்களுக்கு விரும்பியவரை நீங்கள் தெரிவு செய்யலாம். (வங்கியின் பெயரைத் தெரிவு செய்ய வேண்டியதில்லை)
* அடமானக் கடனுக்காக வங்கியை மாற்ற நேரிட்டால் காப்புறுதித் திட்டத்தை மாற்றவேண்டிய அவசியமில்லை.
* காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப்பணம் எந்தக் கட்டத்திலும் அதிகரிக்காது
* உங்கள் அடமானக் காப்புறுதியை ஆயுள் காப்புறுதியாகவும் மாற்றலாம்.

### வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி NON MEDICAL INSURANCE

40 வயது தொடக்கம் 80 வயது வரையிலானவர்களுக்கு வைத்திய பரிசோதனையின்றி காப்புறுதி செய்யப்படும். பணக் கொடுப்பனவு உறுதி செய்யப்படும். நீரழிவு நோயாளர்களும் இதில் அடங்குவார்கள்.

### சிறுவர் கல்வி சேமிப்புத் திட்டம் R.E.S.P

உங்கள் குழந்தைகளின் எதிர்கால உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டத்தில் அரசாங்கம் வழங்கும் 20 வீத மானயத்துடன் எமது நிறுவனம் வழங்கும் 15 வீத போனஸ் ஆகியவற்றைப் பெற்று நன்மையடையுங்கள்.

### நோய் வருமுன் காக்கும் காப்புறுதி CRITICAL ILLNESS INSURANCE



**SRITHARAN THURAIRAJAH**
(Associate Life Underwriter)

**Cell: 416 918 9771**
**Tel: 416 297 6932**

OUR GUARANTEES ARE WRITTEN IN YOUR POLICY

# APPLEMORE AUTOMOTIVE

**உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing
* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**

**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL



## மீண்டும் தமிழ் குறுந்திரைப்பட விழாவும் கலந்துரையாடலும

20இற்கு மேற்பட்ட புதிய திரைப்படங்கள் (Movies from India, Sri Lanka, Europe & Canada) சிறப்புக் காட்சி APARANA SEN'S Mr & Mrs IYer

**இடம்:** Scarborough Civic Crt. Beside Scarborough Town Ctr. Subway (McCowan & Progress சந்திப்பு அருகாமையில்)
**காலம்:** April 19, 2003 சனிக்கிழமை 12:00p.m

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அகவி - Shan - 416-431-5095/905-751-7537

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2003

எமது சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் மே 04, 2003 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3:30மணிக்கு 733 Birchmount Road (Birchmount & Eglinton) உள்ள கனடா கந்தசாமி கோவில் சபா மண்டபத்தில் இடம்பெறும்.

பழைய மாணவர்கள் அவர்களின் வாரிசுகள் அனைவரும் தவறாது பங்கு கொள்ளுமாறு செயற்குழு பணிவன்புடன் வேண்டுகின்றது.

பிரேரணைகள் யாவும் 25.04.2003 நள்ளிரவு 12:00 மணிக்கு முன் செயலாளருக்கு கொ. இ. க. பழைய மாணவர் சங்கம் கனடா, 685 Mccowan Road, Box # 66546, Scarborough, Ontario, M1J 3N8 எனும் முகவரியில் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும். இன்றேல் தொலைநகல் மூலம் 416-609 2001 அல்லது 905 471 3586 இற்கு அனுப்ப வேண்டும்.

| | | |
|---|---|---|
| தொடர்புகளுக்கு: | சி. குகதாசன் | 416 609 2001 |
| | திருமதி சு. சுப்பிரமணியம் | 416 269 1173 |
| | கே. ரி.எம். விஜயகுமார் | 647 290 9794 |
| | நா. தெய்வேந்திரன் | 416 298 6139 |

**மீண்டும்**

**வெகு விரைவில்**



ஏப்பிரல் 4, 5, 6 "கலகலப்பு" திரையிடப்பட்டு வெற்றிபெற காரணமாக இருந்த இரசிகர்களுக்கு எமது கலகலப்பான புதுவருட வாழ்த்துக்கள்.

சிரிக்கத் தவறிய பல இரசிகர்களுக்காக மீண்டும் வெகு விரைவில் எதிர்பாருங்கள் திரையில் **"கலகலப்பு"**

## சின்னையா சிவநேசனின் நூல்களுக்கு அறிமுகவிழா

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் திரு. சின்னையா சிவநேசன் அவர்களின்

**1. சிறுவர் பாடல்கள்** **2. தங்கச்சி கொழும்புக்கோ...?**

கிய இரு நூல்களுக்கும் ஓர் அறிமுகவிழாவினை 20.04.2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 னிக்கு ஸ்காபரோ ஆட்சி மன்றச் சபா மண்டபத்தில் நடத்த இருக்கிறது.

கலை இலக்கிய வாணர்களையும் ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

குரு அரவிந்தன், (செயலாளர்)
கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

# YARLCAN
## STEAM CLEANING



உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-

* DUCT CLEANING
* CARPET CLEANING

மோகன்: **(905) 887-7436** ஸிலல: **(416) 721-9709**

## LARGE INDOOR PUBLIC CAR AUCTION

**EVERY WEDNESDAY EVENING**
**STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM**

**100+ VEHICLES ON DISPLAY INDOORS**

**INCLUDE MANY LATE MODEL**
> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
>V.W., & OTHER FOREIGN
& DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

**WEEKLY CASH BUYERS DRAWS OPEN**
**MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM**

**FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM**

**1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ONTARIO.**

**CIA PUBLIC AUTO AUCTION & SALES**
**416 - 242 - 5052**
www.cialeasing.com



# அன்புத் தமிழ்

புலவர் தொழில்

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்

என்றார் திருவள்ளுவர். புலமை மிகுந்தவர்கள் புலவர்கள். புலமையாவது அறிவுடைமை. அறிவுடையோர் கூட்டம் ஒன்றில் கருத்துரைகள் பரிமாறப்படுகின்றன. எல்லோரும் அந்தச் செல்வத்துள் செல்வமாகிய செவிச் செல்வத்தில் திளைத்து இன்புறுகின்றனர். அந்த இன்பம் ஒரு தலைவனும் தலைவியும் ஒன்று கூடுதலை ஒத்தது. புலவர்களது உள்ளங்களும் ஒன்று கலந்துவிடுகின்றன. அதனால், அவர்கள் பிரிகின்றபோது 'இனி இவரை யாம் என்று காண்போம்' என்னும் ஒரு வகை ஏக்கத்தில் பிரிகின்றனர். இனி ஒருவரை ஒருவர் அவர்கள் மறக்கமாட்டார்கள்.

இக்குறள் கல்வி என்னும் அதிகாரத்தில் வருகின்றது. கற்றாரது உயர்வு பற்றிக் கூறுகின்றது. கற்றாரது உயர்வு உவக்குமாறு கூடி நினைக்குமாறு பிரிதலாகிய தொழிலில் தங்கியுள்ளது. இது ஒருவகைக் கற்றல் முறை. கற்ற கல்வியை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்வதாகிய ஆய்வுத் தொழில். மணல் நிலத்தில் கிணறு தோண்டும் தொழிலுக்கும் இதற்கும் அதிக வேறுபாடில்லை. மணற்கேணியை எவ்வளவுக்குத் தோண்டுகின்றோமோ அவ்வளவுக்கு நீர் ஊறும். அது போலவே அறிவாளர் தலைக் கூடலில் ஒவ்வொருவரினதும் புலன்கள் தோண்டப்படுகின்றன. புலங்கள் ஏற்கனவே தோண்டப் பெற்றவைதாம். எனினும் அவற்றை மேலும் தோண்டத் தோண்ட அறிவு புதிது புதிதாய் ஊற்றெடுக்கின்றது. உவப்பு அதிகரிக்கின்றது. இது தொடர்ந்து நடைபெறும் இன்பத் தொழில். சாந்துணையும் அறிவாளிகள் மேற்கொள்ளும் கல்வித் தொழில்.

ஆக, கற்றல், ஆராய்தல், சிந்தித்தல், தெளிதல், இன்புறல், கற்றாரோடு கலந்துரையாடல், அவர் இன்புறக் கண்டு தாமும் இன்புறல், உள்ளப் பிரிதல் ஆகிய தன்மைகளை உடையது புலவர தொழில் என்கிறார் திருவள்ளுவர்.

இவ்விதத் தலைக்கூடல்களில் சிந்தனை தெளிவுபெறும்; உண்மை மேலும் விளக்கம் பெறும். விளங்கிய உண்மையை, பிற அறிஞர்களும் ஏற்றுக்கொண்ட உண்மையை ஊருக்கு வாய்மொழியாக எடுத்துரைத்தலும் நூல்களாக ஆக்குதலும் புலவருடைய தொழிலாகும்.

நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோரா திருத்தல்

என்று பாடுகின்றார் பாரதியார். தொழில் என்பதற்கு என்ன பொருள் குறித்துப் பாடினார் என்பது சொல்லாமலே புரிதல் வேண்டும். தொழில் என்றால் செயல், வேலை என்று பொருள். கவிதை புனைவது தமது முழுநேர வேலை என்கின்றார். பாரதியார் காலத்தில் தொழிலுக்கு உத்தியோகம் என்ற பொருளும் வந்துவிட்டது.

உத்தியோகம் என்பது ஒழுங்கான வருமானத்தை வழங்கும் தொழிலைக் குறிக்கவே பயன்படுத்தப்படுவது. கவிதை பாடும்

## கவிஞர் வி. கந்தவனம்

தொழிலால் அவருக்கு மாதாமாதம் வருமானம் வந்ததாகத் தெரியவில்லை. அதனால், அந்தப் பொருளில் அவர் பாடவில்லை என்பது வெளிப்படை. கவிதை புனைவதே தமது செயற்பாடு, பிரதான தொழிற்பாடு என்று கூறுகின்றார். உத்தியோகம், விருப்பமோ விருப்பமில்லையோ, வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்காகச் செய்யப்படுவது. அது பெரிதும் தனியாள் அல்லது குடும்பம் சார்ந்த வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டது.

ஆனால், கவிதை பாடுதலாகிய தொழில் பொது நோக்குடையது. தனது உணர்வுகளையும் அனுபவங்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்னும் ஆசையால் நடைபெறுவது. கவிதை பிறப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று கவிதை புனைய வேண்டும் என்கின்ற ஆசை. இயல்பான ஆசை. அடக்க முடியாத ஆசை. பாஞ்சாலி சபதத்துக்கு எழுதிய முன்னுரையில் 'ஆசையால் எழுதி வெளியிடுகின்றேன்' என்று வெளிப்படையாகவே குறிப்பிடுகின்றார் பாரதியார்.

இந்த ஆசை நாட்டுக்கு உழைக்க வேண்டும் எனக்ன்ற ஆசையுடன் கலந்தது. நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்னும் ஆசை நாடு நன்மை பெறவேண்டும் என்னும் குறிக்கோளையன்றி வேறு சுய நோக்கங்கள் இல்லாதது. தனிப்பட்ட பலன் எதையும் எதிர்பாராதது. தனிப்பட்ட பலனை எதிர்பாராத தொழிலுக்கு 'தொண்டு' என்று பெயர். 'தொழிலால் மிகு தொண்டர்' என்று பாடுகின்றார் திருஞானசம்பந்தர்.

தொடரும்


**வெளிவந்து விட்டது**

ரொறொன்ரோ (கனடா) மத்தியஸ்தானத்துக்கு கணிக்கப்பெற்ற
இரகுநாதையர் கனடா வாக்கிய பஞ்சாங்கம்
சுபானு வருஷம் 2003 - 2004
சுபானு வருஷ வருஷப்பிறப்புக் கருமம் - பூரண விபரம் சுபானுவருஷ கந்தாய பலன், சுபானுவருஷ ஆதாய விரயம் சுபானு வருஷ மாத கோசார பலன் மற்றும் பல விபரங்கள்.
TAMIL ALMANAC 2003 - 2004
TEL: 416-760-6509 / 416-7502370

**வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாக தரவும்.**

**ACTION HONDA**

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன் சோதீஸ்
இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




THIS MONTH SPECIAL

APRIL CLEARNCE
ALL NEW & USED CAR ON BOTTOM PRICE

**416-704-1179**

அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm
4334 Kingston Rd, Scarborough




15 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 141

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | | 4 |
| | | | | | | | |
| | | | | | | 5 | |
| | | | 6 | | 7 | | |
| | | | 8 | | | | |
| | 9 | | | | | 10 | |
| | | | | | 11 | | |
| 12 | | | | | | | 13 |

**இடமிருந்து - வலம்**
1. முழுநீள நகைச் சுவைச் சித்திரம்
5. பாம்பு (வல - இட)
6. குகை (வல - இட)
7. நாழிகை
8. இசைக்கருவி
9. வறு (வல - இட)
10. நிலை நிறுத்து
12. மனைவி

**மேலிருந்து - கீழ்**
1. சிதறல்
2. ஒரு செடி
3. கணவன் வீடு
4. ஈரமாகு
5. இரத்தக் குழாய்
6. எதிர் நின்று கூறும் புகழ் மொழி
9. மூட்டை (கீழ் - மேல்)
11. சம்மதம்
12. உவர்நிலம் (கீழ் - மேல்)
13. விசுவாசம் (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொ | ள் | மு | த | ல் | | தி | கு |
| மு | | மு | | த | | ரை | வ |
| ந் | | க் | | மு | றி | | ல |
| த | க் | கா | ர் | | உ | | ய |
| ன் | | டு | | டை | | | ம் |
| | ர் | | | க | மு | கு | |
| டு | | ர் | | | மு | | ரு |
| கோ | ட் | பா | டு | | வு | லா | கு |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் April 25, 2003க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

140இல் வெற்றி பெற்றோர்
1) Mrs. T. Jeyaruban, Mississauga
2) S. Manilal, Toronto


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
*அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
*வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!


(416) 267-0408 731 - 733 kennedy Road [Ken-Mark Plaza]

# சாதனை வீரர்களை சோதனையாக்கும் சாதனை வீரன்

'வளரும் பயிரை முளையிலே தெரியும்' என்பது முதுமொழி. இம்மொழி எந்த இனத்தவருக்கும் பொருந்தலாம். ஏப்ரகாம் லிங்கன், சேர். ஐசாக் நீயூற்றன், கஜன் பத்மநாதன்.... இப்படியே சொல்லிக்கொண்டு போகலாம். நம்மவரை நாம் மதிக்காவிட்டால் எம்மவரை எவர் மதிப்பர். அண்மையில் இந்தியாவின் சென்னை நகரில் கின்னஸ் சாதனை புரிந்து விட்டு கனடா வந்திருக்கும் சாதனை வீரன் சுரேஸ் ஜோக்கிம் அவர்களை சந்தித்தோம். அவர் கனடாவிலும் ஒரு கின்னஸ் சாதனையை மேற்கொள்ளுவதற்காக வந்திருப்பதாகக் கூறினார்.

**உலகசாதனை படைக்க வேண்டும் என்ற வேட்கை சுரேஸிற்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது அவரின் அடிமனதில் சிறுவயதில் இருந்தே இருந்திருக்க வேண்டும். நன்றி: உலகத் தமிழோசை (இதழ் -3) பக்கம்: 37.**

இந்த ஆண்டின் (2003) ஆரம்பத்தில் 42 மணி நேரம் தொடர்ச்சியாக பாடலுடன் ஆடலுமாக கின்னஸ் சாதனை புரிந்த சுரேஸ், இதுவரை 24 உலக சாதனைகளை புரிந்து தமிழரின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளார்.



தமிழீழத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுரேஸ் இப்பொழுது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றார். சிறுவயதிலிருந்தே சாதனைகள் புரிய வேண்டுமென்ற மனப்பான்மையுடன் வளர்ந்து வந்த இவர், தமது எண்ணங்களிற்கு உருவம் கொடுத்து வருகின்றார். தொடர்ந்து பல சாதனைகளை செய்வதற்கு அட்டவணைகள் வைத்திருக்கும் சுரேஸின் அபார திறமையை எல்லோரும் வியக்கிறார்கள். மே மாதத்தின் நடுப்பகுதியில் கனடா ரொரன்றோவில் தொடர்ச்சியாக வானொலியில் Radio DJ ஒன்றை நடத்தி சாதனை புரிவதற்காக ரொறொன்ரோவில் ஆயத்தங்களை மேற்கொண்டு வருகிறார். இவர் ஏற்கனவே சுவீடனைச் சேர்ந்த Dr. Christian Dartos (கிறிஸ்ரியன் டாட்ரஸ்) அவர்களால் ஒக்ரோபர் 8, 2001 இலிருந்து ஒக்ரோபர் 12, 2001 வரை 103 மணி 30 நிமிட நேரம் தொடர்ச்சியாக வானொலியில் ஏற்படுத்திய மரதனை முறியடிக்க வேண்டும் என்று சாதனை வேகத்தில் அதற்குரிய ஆக்கவேலைகளை செய்து வருகின்றார். இதற்காக ரொறொன்ரோவில் இருக்கும் ஊடகவியலாளர்களின் உதவிகளையும் இங்குள்ள மக்களின் ஆதரவையும் வேண்டி நிற்கிறார். ரொறொன்ரோவில் நிறைவேற்ற இருக்கும் சாதனையைத் தொடர்ந்து, மீண்டும் தமிழ்நாடு செல்ல இருக்கின்றார். தமிழ் நாட்டில் யூலை 25/26/27, 2003 ஆம் திகதிகளில் Drumming மரதன், கின்னஸ் சாதனையை தமது அடுத்த சாதனையாக சந்தோம் ஸ்ரேடியத்தில் (சென்னையில்) செய்யவிருக்கிறார். இதனைத் தொடர்ந்து தமிழ்ப் படம் ஒன்றிலும் ஆங்கிலப் படத்திலும் நடிக்க இருப்பதாகக் கூறும் இவர், இந்த இரண்டு படங்களிலும் சாதனை செய்வதே நோக்கமாகவும் கூறுகின்றார். உதவி வேண்டி நிற்கும் சிறுவர்களிற்கு உதவுவதற்காக தமிழ் சினிமாப் படத்தில் நடிப்பதாகக் கூறுவதில் பெருமைப்படுகின்றார். சாதனை வீரரினின் தொடர்ந்து செய்யவிருக்கும் சாதனைகளில் முக்கியமானதாக செய்யவிருப்பது, ஜேசு கிறிஸ்துநாதர் பிறந்த பெத்தலகம் இடத்திலிருந்து சமாதான விளக்கை (ரோச்) கைகளில் ஏந்திய வண்ணம் 150 நாடுகளிற்கு தொடர்ச்சியாக ஓடவிருக்கிறார். பெத்தலேகாமிலிருந்து டிசெம்பர் 24, 2004 இல் (நத்தார் தினம்) நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பிக்க இருக்கும் இந்தச் சாதனை உலகிலிருக்கும் 150 நாடுகளிற்கு ஊடாகச் சென்று இறுதியாக தான் இப்பொழுது வசித்து வரும் சிட்னியை அடைய இருக்கின்றார்.

இந்தச் சாதனையின் முக்கிய அம்சமாக சுரேஸ் கருதுவது: ஒவ்வோரு நாட்டினூடாகவும் செல்லும் போது அந்த நாட்டிலுள்ள மக்கள், அரசியல் தலைவர்கள், சினிமா நடிகர்கள், விளையாட்டு வீரர்கள்.... இவ்வாறு எல்லோரும் அந்த சமாதான விளக்கை வாங்குவதற்கு ஆர்வம் கொண்டு இருப்பதானது உலகின் சமாதானத்தின் முக்கியத்தை வேண்டி நிற்கும் மக்களிற்காக இந்தச் சாதனை அமையும் என நம்புகின்றார்.

மேலும் நீந்துதலில் சாதனை செய்தல், ஹெலிகொப்பரில் பறப்பது (Fly) போன்ற சாதனைகளைச் செய்யவும் தீர்மானித்துள்ளார்.

உலகில் ஆகக் கூடிய சாதனை செய்வதே தனது குறிக்கோள் எனத் திடசங்கற்பம் கொண்டு இருக்கும் சுரேஷ், உலகிலுள்ள சிறுவர்களிற்கு உதவுவதே தனது பாரிய நோக்கமாக கூறுகின்றார். தமிழ் மக்களின் உதவிகளையும் ஒத்தாசைகளையும் வேண்டி நிற்கும் சுரேஸின் சாதனைகள் தொடர 'விளம்பரம்' பத்திரிகையும் வாழ்த்துகின்றது.

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**


## FABRICATED PLASTICS LIMITED

## வேலை வாய்ப்பு

**GENERAL LABOUR FOR FIBREGLAS FABRICATION MANUFACTURING**

**** STRONG PERSONS ARE NEEDED IMMEDIATELY****

பொதுவேலையாளராகத் தொழில் புரிவதற்கு பலமான வேலையாளர்கள் உடனடியாக அழைக்கப்படுகின்றனர். வாகனம் வைத்திருக்க வேண்டும். நேரடியாக விண்ணப்பிக்கவும்.

☞ Plant is located near Canada's Wonderland
(Keele Two Lights North of Major Mackenzie).

☞ Must have reliable car.

☞ Please apply in person (no phone calls)
@FABRICATED PLASTICS LIMITED, 2175 Teston Road, Maple, Ontario.





# நாமும் நமது இல்லமும்
## 163

வீடு வாங்கியவர் மனதை மாற்றினால் என்ன நடக்கலாம்!

சிலவேளை வீடு வாங்குவதற்குரிய பத்திரங்கள் ஒப்பமிட்ட பின் தமது மனதை மாற்றினால் என்ன நடக்கலாம்? இதனால் பொதுவாக வீடு வாங்கியவர்களிற்கே பாதிப்பு ஏற்படும் என்று முதலாவதாகத் தெரிந்திருத்தல் நல்லது. புதிதாக கட்டப்படும் வீடுகளிற்கும், திருப்பி விற்கப்படும் வீடுகளிற்கும் (Re-sale), சட்டங்கள் வித்தியாசமாகக் காணப்படுகின்றன. இந்தக் கட்டுரையில் Re-sale வீட்டைப் பற்றிப் பார்ப்போம்.

முதலாவதாக வீடு வாங்க விற்பதற்காக ஒப்பமிடும் போது பத்திரம் ஒரு சட்ட பூர்வமான ஆவணம் என்பதனை வாசகர்கள் அறிந்திருப்பது முக்கியமானதாகும். இப்பத்திரத்தில் ஒப்பமிடும் போது, வீடு வாங்குபவர், விற்பவர் இருபகுதியினருக்கும் தத்தமது உரிமைகள் கட்டுப்பாடுகள், கடமைகள் குறிக்கப்பட்டுள்ளன. தத்தமது கடமைகள், உரிமைகளை மீறுபவர்களிற்கு தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது உண்மை. இருபகுதியனரும் ஒப்பமிட்ட பின் தமது மனதை மாற்றினால் அதற்குரிய பின்விளைவுகளை எதிர்பார்க்க வேண்டியிருக்கும். ஏதோ காரணத்திற்காக விற்றவர் அல்லது வாங்கியவர் தமது மனதை மாற்றினால் யாருடைய பிழை என்பதனை தகுந்த சட்டத்தரணி மூலம் அறிந்து கொள்ளவேண்டும்.

வீடு வாங்கிய ஒருவர் பல காரணங்களிற்காக வீடு வாங்கியபின் தமது மனதை மாற்றிக் கொள்ளலாம். இதற்குரிய ஒரு காரணமாக மோட்கேஜ் கிடைக்காமல் போனதாக இருக்கலாம். அதாவது வீடு வாங்குபவர் தமக்குரிய மோட்கேஜ் கடனை (Loan) பெறமுடியாமல் இருப்பது இப்படியான நிலைமையைத் தகுந்த முறையில் வீடு வாங்குவதற்குரிய பத்திரத்தை பூர்த்தி செய்வதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். உதாரணமாக வீடு வாங்குவதற்குரிய பத்திரத்தை பூர்த்தி செய்யும் போது குறிப்பிட்ட நாட்களிற்கு இடையில் (5 வங்கி நாட்கள்) மோட்கேஜ் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் பத்திரத்தை உருவாக்கிக் கொள்ளலாம். (Mortgage financing condition) மேலும் ஒரு காரணமாக வீட்டை வாங்கியவரிற்கு வீடு பரிசோதனையின் போது கொடுக்கும் தகவல்கள் வீடு பரிசோதகர் (Home inspector) வீட்டில் இருக்கும் பெரிய பிழைகளைக் கூறும் போதும் வீடு வாங்கியவர் தமது மனதை மாற்றச் சந்தர்ப்பம் உண்டு. இந்த நிலைமையையும் தகுந்த நிபந்தனையுடன் ஒரு பத்திரத்தை பூர்த்தி செய்வதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். (Inspection condition)

இப்படியான காரணங்களால் வீடு வாங்கியவர் தமது மனதை மாற்றினால் எதுவித கடமைப்பாடும் இல்லாமல் அந்த வீடு வாங்குவதற்குரிய கடமையிலிருந்து எதுவித பிரச்சினைகளோ நட்டஈடோ இல்லாமல் இலகுவாக விலகிக் கொள்ளலாம். ஆனால் இப்படி விலக வேண்டியதற்குரிய காலம் பத்திரத்தில் குறிக்கப்பட்டு இருக்க வேண்டும். பொதுவாக ஐந்து (5) நாட்களாகவே இருக்கும். இந்தக் காலத்தை தாண்டி மனதை மாற்ற முடியாது என்பதனையும் மனதில் கொள்ள வேண்டும். சில சந்தர்ப்பங்களில் வீடு வாங்கியவர் வேறு காரணங்களிற்காக தமது மனதை மாற்றிக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. அதாவது தாம் கூடிய விலையைக் கொடுத்து வீடு வாங்கிவிட்டோம், பிழையான இடத்தில் வீடு

### ராஜா மகேந்திரன்

வாங்கிவிட்டோம் அல்லது வேறு சொந்தக் காரணங்கள்....

இந்தக் காரணங்களால் மனதை மாற்றினால் பல பிரச்சினைகள் ஏற்பட சந்தர்ப்பம் உண்டு. பொதுவாக கொடுத்த வைப்புப் பணத்துடன் (Deposit money) அல்லது அதற்கு மேலான பிரச்சினைகள், நட்டங்களையும் பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. சில சந்தர்ப்பங்களில் வீடு விற்ற பணத்தைக் கொண்டு, வீடுவிற்றவர், வேறு வீடு வாங்குவதற்காக ஒப்பமிட்டிருந்தால் மேலும் பல சிக்கல்கள் ஏற்படக் கூடும்.

இப்படியான நிலைமைகளினால் வரும் சாதக, பாதகங்களை தகுந்த சட்டத்தரணியின் அறிவுறுத்தல்களின் மூலம் பெறுவது நல்லது. சில சந்தர்ப்பங்களில் (மிகக்குறைவு) வீடு விற்றவர்களிற்கு சட்டவல்லுனர்களும் சேர்ந்து ஒரு பொதுவான முடிவு எடுக்கலாம். இப்படி முடிவு எடுத்தால் இரு பகுதியினரும் சேர்ந்து குறிப்பிட்ட contract இலிருந்த விடுபட்டுக் கொள்ளலாம். (இதனை mutual release எனக் கொள்ளலாம். எதற்கும் இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் சட்டத்தரணியுடன் முதலில் தொடர்பு கொள்ளவும்.

ஏற்படப்போகும் பிரச்சினைகளிலிருந்து தவிர்ப்பதற்கு சிறந்த வழி, வீடு விற்கும் / வாங்கும் பத்திரங்களில் ஒப்பமிடும் போது சகல நிலைமைகளையும் ஆராய்ந்து தெரிந்து விற்றல் வாங்கல் சிறந்தது.


**துணிந்த பின் துயரம் கொள்ளுதல் தவறு.**


**CONDO FOR SALE**



- Neilson & Sheppard
- 2 Bedroom
- 2 Washroom
- Corner Unit
- Good Layout
- 1 Car parking
- Asking only $130,000.00

**FREEHOLD TOWN HOUSE FOR SALE**



- Neilson & Sheppard
- 3 Bedroom
- 3 Washroom
- Single attached garage
- Basement apartment possible
- Asking $214,900.00

**BUILDING FOR SALE**


- Asking Price $729,000.00

**HOUSE FOR SALE**




3 BEDROOMS
* 2 BEDROOMS
* 2 KITCHEN
*SIDE ENTRANCE *NEILSON & SHEPPARD
*PRICE $259, 000.00

**CONDO FOR SALE**




- Neilson & MCLEVIN
- 2 Bedroom
- 2 Washroom
- Good Layout
- 2 Car parking
- Open Balcony
- Asking only $156,900.00

**HOUSE FOR SALE**



- 3 BEDROOM
- 3 BEDROOM BSMT.
- SEP. ENTRANCE
- 2 KITCHEN
- BELLAMY & LAWRENCE
- Asking only $265,000.00

**HOUSE FOR SALE**



* 3 BEDROOMS
* 2 WASHROOMS
* 1 KITCHEN
* DETACHED CONDO.
* NEILSON & SHEPPARD

Raja M. Mahendran P.Eng.
T.P: 416-315-9397
Pager - 416-589-4270

| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 5.20% |
| Prime rate | 4.75% |
| Bank rate | 3.00% |

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**



Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12
Professional Photographer - கதிர்
416 - 750 - 8118
2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**

**MORTGAGES**



*Five Years closing mortgage rates (அடமானம்) 5.20% on $100,000.00 per month installment comes out $601.11. For different time period closing rates are given below*

*Mortgage Rates (மோட்கேஜ் வட்டி வீதம்)*

| Period | Rate of interest |
|---|---|
| 6 month | 4.55% |
| 1 Year | 3.90% |
| 2 Year | 4.50% |
| 3 Year | 4.65% |
| 4 Year | 4.85% |
| 5 Year | 5.25% |
| 7 Year | 5.90% |
| 10 Year | 6.15% |

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply



For more information call:
**Anil Joshi** at
**416.888.1072**

# ஆன்மீக நெறி



எமது உள்ளத்தை எளிதாக அமைதிப்படுத்தி ஆக்க ரீதியாக ஒரு நிலைப்படுத்தி ஆசைகளை அறுத்து உண்மையான இன்ப வாழ்வும் மகிழ்ச்சி நிலையும் பெறுதற்கு ஆன்மீக வழிச் சிந்தனை ஒன்றே மிகச் சிறந்த வழி என்பது பல வகையிலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

ஆன்மீகச் சிந்தனையின் அடிப்படை ஆசைகளை, ஒழித்தல் என்று கூறும் போது ஆசைகளே இல்லை என்றால் வாழ்க்கையின் தேவைகளைத் தேடிப் பெறவேண்டும் என்ற ஒரு தூண்டுதலே இல்லாமல் வாழ்க்கை வரண்டு விடக் கூடும் என்பது சிலருடைய அச்சம்.

ஆசைகளைத் துறக்க வேண்டும் என்றால் ஒருவன் தன் அவசியத் தேவைகளைத் துறந்து விடுவது என்று சிலர் பொருள் கொண்டு விடுவதன் காரணமாகத்தான் இந்தக் குழப்பம் ஏற்படுகின்றது.

சில பல தேவைகளின் அடிப்படையில்தான் மனித வாழ்க்கையே அமைந்திருக்கின்றது. தேவைகளைத் துறந்துவிட்டால் மனிதன் இந்த உலகில் ஒரு விநாடி கூடவாழமுடியாது. உணவு, உடை, உறையுள், மனையாள். இவை அத்தியாவசியத் தேவைகள் மனித உயிர் வாழ இவை அவசியமாக இருப்பதுடன் மனித இன விருத்திக்கும் இல்லறம் அவசியம். எனவே அவசியம் என்பதற்கும் ஆசை என்பதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பசியுணர்வின் உந்துதலினால் உணவைத் தேடி உண்கின்றோம். பசிக்கு உணவு இயற்கை நிலை. எனவே உயிர்கள் அனைத்திற்கும் இது அவசியம். வயிற்றுக்கு உணவு, உடல் ஆக்கத்திற்கு உணவு, உயிர் நிலைப்பதற்கு உணவு என்னும் போது அது ஒரு தேவை. மாறாக நாக்கு ருசிக்காக உணவு, பெருமைக்காக உணவு, ஆடம்பரத்திற்காக உணவு என்று இந்த வகையில் எண்ணம் வரும் போது அது பேராசையாகி விடுகின்றது. எனவே உணவில் ஆசை உள்ளவன் ருசியான உணவு வழங்கும் இடங்களை நாடிச் செல்லும் பேராசைக்காரனாகி விடுகின்றான்.

**நா. க. சிவராமலிங்கம்**

அடுத்து, ஆடையில்லாத மனிதன் அரை மனிதன் என்பதற்கு ஏற்ப மானத்தைக் காப்பதற்கு உடை அவசியம். உடம்பை தட்ப வெப்ப நிலைகளில் இருந்து பாதுகாப்பதற்கு உடை அவசியம். உடை விடயத்தில் ஆண்களைவிட பெண்களிடம்தான் போட்டி அதிகம். பருத்திப் புடவையே போதும் என்றிருப்பர் சிலர். பட்டுப் புடவை வேண்டும் என்பர் வேறு சிலர். பருத்திப் புடவை என்பது தேவை. பட்டுப்புடவை என்பது ஆசை. பணக்காரர் கழிக்கும் உடைகள் ஏழைகளுக்கு அவசிய ஆடைகளாக அமைகின்றன என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

மனை விடயத்திலும் குடிசை போதும் என்பர் சிலர் - மாளிகை; அதுவும் அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை வேண்டுமென்பர் வேறுசிலர். வறிய பொருளாதாரநிலை தேவைகளைக் குறைப்பதையும் செல்வச் செழிப்புநிலை தேவைகளைப் பெருக்கி அவற்றை ஆசைகளாக ஆக்கி விடுவதையும் அறியலாம். ஆனால் வெறும் தேவையை மட்டுமே நிறை வேற்றிக் கொள்ள முற்படும் போது நம்மால் நிச்சயமாகத் திருப்தியடைய முடியாது என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும். தேவைகளைப் பெறுவதில் ஆசை தலைகாட்டத் தொடங்கி விட்டால் அதற்கு எல்லையே இல்லை. இதனால் தான் ஆசைகள் அலை போல தொடர்ந்து வருமென்பர். இருந்தும் தேவைகள் ஆசைகளாக மாறக் கூடாது.

ஆசைகள் எப்போதுமே புலன் வழிப்பட்ட சபலங்களாகவே இருக்கும். புலன் இச்சைககள்தான் ஆசைகளாக உருவெடுக்கின்றன. ஆசைகள் அகற்ற வேண்டுமானால் முதலில் புலன் உணர்வுகளைக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர வேண்டும். புலன் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது சாமான்னியமான விடயமில்லை. ஐம்புலன்களால் உடல் அலைக்கழிக்கப்படுகின்றது. ஓட்டைகள் நிறைந்த பாத்திரத்தில் நீ கொட்டி நாலாபுறமும் சிந்தி ஒழுகி வீணாகிப் போய்விடும். ஓரிரு புலன்களைக் கட்டுப்படுத்தினால் வேறுபுலன் உணவுர்வுகள் தறிகெட்டு ஓடத்தொடங்கும். ஆகவேதான் மனத்தின் பலவகையான அலை மோதல்களையும் அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்த ஆன்மீக வழிகளை நமது முன்னோர் நாடிச் சென்று வெற்றியும் கண்டனர்.

புலன் உணர்வுகள் முற்றிலும் உடலோடு தொடர்பு கொண்டவையாகும். நமது உடலைப் பற்றியே நாம் எப்போதும் எண்ணிக் கொண்டிருக்கும்வரை புலன் இச்சை அலைக்கழிப்பினின்றும் நாம் மீளவே முடியாது. சாதாரண மக்கள் அனைவருமே தத்தம் உடலை வைத்தே தங்களைக் கணித்துக் கொள்கின்றனர். உடல் தொடர்பான மகிழ்ச்சி இன்பத்தை வைத்தே வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர். உண்மையில் உடலுக்கு ஒரு மகத்துவமும் இல்லை. உடல் என்பது ஒரு காரணம் தான். காரியமாக உடலின் உள்நின்று ஆட்டிப் படைப்பது ஆன்மாவேயாகும். ஆன்மா என்பது உடலில் ஊடாடி நிற்கின்ற உயிரேதான். இந்த உயிராகி ஆன்மாவை நாம் விளங்கிக் கொள்ளும் போதுதான் நமது உள்ளம் தெளிவடைந்து குழப்பத்திலிருந்து மீளுகின்றது. எனவே உள்ளத்தைத் தூய்மையாக்க ஆன்மீக வாழ்வில் ஒரு விருப்பத்தை ஏற்படுத்தி சபலங்கள் ஆசாபாசங்கள் போன்ற மாசுகளுக்கு அப்பாற்பட்ட ஓர் உயர்ந்த வாழ்க்கை முறையை அழைத்துக் கொள்வதுதான் ஆன்மீகம். உள்ளத்தில் குடிகொள்ளும் தீய சக்திகளை அறிந்து அடிக்கடி அவற்றை அப்புறப்படுத்தி, உள்ளத்தை தூய்மைப்படுத்தினால் நல்ல பண்புகளை அங்கு இடம் பெறச் செய்து ஆண்டவனை அங்கு எழுந்தருளச் செய்யலாம்.

அன்பு, அமைதி, தன்னம்பிக்கை, கலங்காத உறுதி, பெருந்தன்மை, பொதுநலம், தியாகம், சேவை போன்ற பண்புகள் உள்ளத்தில் இடம்பெற்றால் - ஆன்மீகம் தளிர்க்கும். முதுமையில் மாத்திரமன்றி இளமையிலும் ஆன்மீகம் துளிர்விடலாம். ஞானசம்பந்தரின் வரலாறு இதற்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது.

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை**
**விளம்பரங்கள் பக்கங்கள் 17, 18, 19**

**வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?**

**UNITED**
**PERSONAL INJURY ASSOCIATES**
*The Car Accident People*
ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

**கனடாவில் 30 வருடத்திற்கும் மேலான அனுபவம்**

**உங்களுக்குத் தெரியுமா?**
நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடாகப் பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**
உங்களால் **$ 172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

உடல்ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள்
**யுனைட்டெட்**

பண இழப்பீட்டுத் தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய உடன் தொடர்பு கொள்ளவும்

**அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்**

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளி மாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெறமுடியும். நீங்கள் சாரதியாக இருந்தாலும் பாதசாரியாக இருந்தாலும் பேரூந்தில் பயணிப்பவரானாலும் சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெறமுடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு $1000.00 வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**


**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

தமிழ் உட்பட 25ற்கும் அதிகமான மொழிகளில் சேவை வழங்கப்படுகிறது

*இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்*

**தீபன் - (416) 505-9804**

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main Street E., 1st Floor, Hamilton
- 75 Collier St., Unit A, Barrie





# இந்தியா Vs பங்களாதேஷ் - மே.இ.தீவுகள் Vs அவுஸ்திரேலியா விளையாட்டுத் தகவல்கள் - 121 கிரிக்கெட்

**இந்தியா Vs பங்களாதேஷ்:**

பங்களாதேஷ்ன் டாக்காவில் வெள்ளிக்கிழமை தொடங்கும் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் அந்நாட்டு அணியுடன் இந்தியா மோதுகிறது.

உலகக் கோப்பைப் போட்டியில் சிறப்பாக ஆடிய இந்திய அணி, இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவிடம் தோற்றது. அதன் பின்னர் இந்தியா விளையாடும் முதல் போட்டி இது.

மறுபுறம் வங்கதேசம் இதுவரை ஆடியுள்ள 67 ஆட்டங்களில் 3இல் மட்டுமே வென்றுள்ளது. உலகக் கோப்பைப் போட்டியில் ஓர் ஆட்டத்தில் கூட வங்கதேசம் வெல்லவில்லை.

இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கர், ராவிட், ஸ்ரீநாத், கும்பளே, நெஹ்ரா ஆகியோர் வெவ்வேறு காரணங்களுக்காக இப்போட்டியில் பங்கேற்கவில்லை. அதனால் அணியில் அறிமுகமாகியுள்ள இளைஞர்கள் மீது அனைவரது கவனமும் திரும்புயுள்ளது.

**தொடக்க ஆட்டக்காரராக கம்பீர்:** துணைக்கப்டன் வீரேந்திர சேவாக்குடன் கௌதம் கம்பீர் தொடக்க ஆட்டக்கரராக களம் காணுவார் என்றார் கங்குலி.

இதையடுத்து, கங்குலி 3வது ஆட்டக்காரராகவே களம் இறங்குவார் என்பதும் உறுதியாகியுள்ளது. காயம் காரணமாக ராவிட் பங்கேற்காத நிலையில் விக்கெட் காப்பாளராக பார்த்திவ் படேல் விளையாடுவதும் உறுதியாகியுள்ளது. உலகக் கோப்பைப் போட்டியில் சுமாராகவே விளையாடினாலும், இந்த ஆட்டத்தில் தினேஷ் மோங்கியாவுக்கு வாய்ப்பு வழங்கப்படும் எனத் தெரிகிறது.

**வங்கேதச அணியில் மாற்றங்கள்:** மறுபுறம், உலகக் கோப்பைப் போட்டியில் தான் தோல்வியைத் தழுவியதால் வங்கதேச அணியில் கப்டன் உட்பட பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும், தான் பெற்றுவரும் தொடர் தோல்விகளுக்கு இந்தியாவுடனான ஆட்டத்தில் வங்கதேசம் முற்றுப் புள்ளி வைக்குமா என்பது கேள்விக்குறியே.

**அணிகள்:**

**இந்தியா:** கங்குலி (கப்டன்), சேவாக், கம்பீர், கைஃப், யுவராஜ் சிங், தினேஷ் மோங்கியா, சஞ்சய் பாங்கர், அகர்கர், பார்த்திவ் படேல், ஹர்பஜன் சிங், ஜாகீர் கான், அவிஷ்கர் சால்வி, சரண்தீப் சிங், அமித் மிஸ்ரா, அபிஜித் காலே.

**வங்கதேசம்:** காலித் மஹ்மூத் (கப்டன்), ஜாவித் ஓமர், மெஹ்ராப் ஹீஸைன், முகமது அஷ்ரபுல், ஹபிபுல் பஷர், அக்ரம் கான், அலோக் கபாலி, துஷார் இம்ரான், காலித் மசூத், சன்வர் ஹீஸைன், முகமது ரஃபிக், தபஸ் பைஸ்யா, மஞ்சுருல் இஸ்லாம், தாரிக் அஸீஸ், தல்ஹா ஜீபைர். களம் காணுகின்றனர் கம்பீர், சால்வி.

மேற்கிந்தியத் தீவுகளில் அண்மையில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்தியா 'ஏ' அணியில் இடம்பெற்று சிறப்பாக ஆடிய தொடக்க ஆட்டக்காரர் கௌதம் கம்பீர், வேகப் பந்து வீச்சாளர் அவிஷ்காரர் சால்வி இருவரும் வங்கதேசத்துக்கு எதிரான ஆட்டத்தில் களம் காணுகின்றனர் என கங்குலி வியாழக்கிழமை அறிவித்தார்.

**வரலாறு படைக்கிறார் ஸ்டீவ் வாஹ்:** அவுஸ்ரேலியா - மே.இ. தீவுகள்



மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியாவுக்கு இடையேயான முதல் கிரிக்கெட் டெஸ்ட், கயானாவில் உள்ள போர்டா மைதானத்தில் தொடங்குகிறது.

ஸ்டீவ் வாஹ் விளையாடும் 157வது டெஸ்ட் இது. கிரிக்கெட் வரலாற்றில் அதிக டெஸ்ட்களில் விளையாடிய வீரர் என்ற பெருமையை ஸ்டீவ் வாஹ் பெற உள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கப்டன் ஆலன் பார்டர் 156 டெஸ்ட்களில் விளையாடியுள்ளதே இதற்கு முந்தைய சாதனை.

**கலகத்தில் மே.இ. தீவுகள்:** லாரா தலைமையில் விளையாட முடியாது என்று கூறியே முன்னாள் கப்டன் கார்ல் ஹீப்பர் விலகியதாகக் கூறப்படுகிறது. டபிள் விக்கெட் போட்டியில் பங்கேற்ற அதிரடி தொடக்க ஆட்டக்காரர் கிரிஸ் கெயிலும் அணியில் சேர்க்கப்படவில்லை.

துணைக் கப்டனாக அறிவிக்கப்பட்ட ராம் நரேஷ் சர்வான், காயம் காரணமாக இந்த ஆட்டத்தில் பங்கேற்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

1999இல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு அவுஸ்திரேலியா பயணம் மேற்கொண்ட போது ஓர் இரட்டை சதம் உள்ளிட்ட 3 சதங்கள் அடித்து 2-2 என்ற கணக்கில் தொடரை சமன் செய்ய லாரா உதவினார். இப்போதும் துடுப்பாட்டத்தில் லாராவையே சார்ந்துள்ளது.

40 இன்னிங்ஸ்களில் 17 முறை லாரா

கைப்பற்றியுள்ளனர். மனைவியின் உடல்நிலை காரணமாக மெக்ராத்தும் ஊக்கமருந்து உட்கொண்டதால் வார்னும் அணியில் இல்லாதது மேற்கிந்தியத் தீவுகளுக் சாதகமான அம்சம்.

போர்டா மைதானத்தில் இதுவரை விளையாடிய 6 ரெஸ்ட்களில் 3இல் அவுஸ்திரேலியாவும், 2இல் மேற்கிந்தியத் தீவுகளும் வென்றுள்ளன.

**எஸ். கணேஷ்**

**அணிகள்:**

**அவுஸ்திரேலியா:** ஸ்டீவ் வாஹ் (கப்டன்), மேத்யூ ஹேடன், ஜஸ்டின் லேங்கர், ரிக்கி பாண்டிங், மார்ட்டின் லவ், டேரன் லீமான், ஆடம் கில்கிறிஸ்ட், பிராட் ஹாக், பிரெட் லீ, ஜேசன் கில்லெஸ்பி, ஆன்டி பிக்கெல், ஸ்டுவார்ட் மேக்கில்.

**மேற்கிந்தியத் தீவுகள்:** பிரையன் லாரா (கப்டன்), கார்ல்டன் பாக், டேவிட் பெர்னார்ட், சிவநாராயன் சந்தர்பால், டேரன் கங்கா, வேவல் ஹைன்ட்ஸ், ரிட்லி ஜேகப்ஸ், மார்லன் சாமுவேல்ஸ், டேவன் ஸ்மித், பெட்ரோ காலின்ஸ், வாஸ்பர்ட் டிரேக்ஸ், மெர்வின் தில்லான், ஜெர்மைன் லாசன்.


**THE CHILDREN EDUCATION TRUST OF CANADA**

(CET)

சீலன் A. - 416-451-0271

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறுதொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் வருடத்திற்கு $400 இலவசம்

அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்புத் திட்டம். (R.E.S.P)



- The Scotia Bank
- The Royal Trust
- Grant Thornton

**TWO YEARS DIPLOMA**ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்


**இன்னும் பல சலுகைகள் உண்டு**

இலவச ஆலோசனைகள் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

**நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால் அதனால் பாதிக்கப்படுவர்கள் நமது பேரக் குழந்தைகளே!**

வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

**INCOME TAX**



Tarsem Parm

- **Incorporation**
- **Business Set-up & Registration**
- **Accounting & Bookkeeping**
- **Payroll, G.S.T. & P.S.T.**
- **Incomes Taxes** (Free E-File)
- **CCRA Audit and Appeals**

**FINANCIAL SERVICES**



- **Mortgages**
  upto 1.5% below the bank posted rates
- **Lines of Credit**
- **Business Loans**
- **Personal Loans**

**PERMANENT RESIDENT CARDS**

**Free Applications filled for Seniors for PR Cards**
**Special Discounted rates to Taxi/Truck Operators, Serving the community since 1992**

Scarborough & Markham Area
416-937-1563
2 Irenemount Cres., Markham
(Markham Rd./Steeles Ave.)

Brampton
416-937-1563
8 Strathearn Ave., Unit 1
(Dixie/Steeles)

# சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து.



## தன்மானம்

1ஆம் பக்கத் தொடர்ச்சி

**ஆறாவது அறிவு**

தினைவிதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பார்கள். முன்னைய அமெரிக்க முதல்வர்கள் உலகம் முழுவதும் விதைத்த வினைகள் நன்றாக விளைந்து பூத்துக் குலுங்குவதைத் தொலைக்காட்சிகள் ஊடாக இன்று நாம் காண்கின்றோம். விதைத்த வினைகளை எவ்வாறு அறுக்கலாம்? மகன் தந்தைக் காற்றும் செயலாக தந்தை Bush விட்ட குறையை நிவர்த்தி செய்ய மகன் Bush என்ன செய்யலாம் என சிந்தித்தார். ஆப்கானிஸ்தான் மீதும், ஈராக் மீதும் போர் தொடுக்க வேண்டும். போர் அனுபவம் கொண்ட மந்திரிகளுடன் ஆலோசித்தார். உலகிலேயே சிறந்த CIA போன்ற துப்பறிவாளர்கள் கைவசம் இருந்தும் செப்ரெம்பர் 11, 2001 ஆம் திகதி உலக வர்த்தக மையத்திற்கு நடந்த அனர்த்தங்கள் அமெரிக்காவின் இறால் போட்டு சுறா பிடிப்பதற்கான ஆயத்தம் தான் என்றால் கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அமெரிக்க மண்ணிலேயே வளர்த்த கடாக்கள் மார்பில் பாய்ந்தன. அனுதாபத்தை உலகம் முழுவதும் இருந்து பெற்றுக் கொண்டு ஆப்கானிஸ்தான் மீதும், உலக நாடுகளின் எதிர்ப்புகளுடனும் ஈராக் மீதும் போர் தொடுத்தார் மகன் Bush.

**போருக்கு ஆதரவு கொடுப்பவர்கள் யார்?**

- உலகம் முழுவதும் விதைத்த வினைகளை அறுத்தே ஆகவேண்டும் என்ற நிலைக்குள்ளான பிரித்தானியா.
- உலக வல்லரசை, எண்ணையைக் காட்டி தம்வசம்



வைத்துக் கொண்டு எண்ணை எடுப்பதில் போட்டியாகவும், தமது நாட்டின் மீதும் சதாம் படையெடுக்கலாம் பயம் கொண்ட பண முதலைகளாக இருக்கும் சவுதி அரேபியா, குவைத், டுபாய், ஜோர்தான் போன்ற மத்திய கிழக்கு நாடுகள்
- அமெரிக்கரிடம் கையேந்தி நிற்கும் நாடுகளும் அடங்கும்.

**ஆதரவு கொடுக்காத நாடுகள்**

- மற்றைய நாடுகளின் விடயங்களில் தலையிடக் கூடாது என்று எண்ணும் நடுநிலைமை வகிக்கும் நாடுகள்.

- சதாம் உசையினுடன் இரகசியமாக உறவு வைத்துப் பணம் பண்ணும் நிலைமை இல்லாமல் போய்விடும் என்ற நிலைக்கு தள்ளப்படும் பிரான்ஸ், ஜேர்மனி, இரஸ்யா, சீனா போன்ற நாடுகள்
- சதாம் உசையின் எங்கள் இனம் அல்லது எங்கள் மதம். அவன் யாரை கொள்ளையடித்தால் என்ன, கொலை செய்தால் என்ன அவனுக்கு எந்த வகையிலும் நாம் ஆதரவு தெரிவிப்போம். அமெரிக்காவை எந்தவகையிலும் கண்டனம் தெரிவிப்போம் என்று கண்மூடித்தனமாக மதத்தால் கண்களை மறைத்தவர்களும் அடங்குகிறார்கள்.

ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு போர் தொடுப்பதும் மனித உயிர்கள் அழிவதும் காலத்திற்கு காலம் இடம்பெறுவதே. இன்று தொலைக்காட்சிகள் மூலம் போரின் விளைவுகளை அனர்த்தங்களை நேரடியாக நாம் காண்கின்றோம். நடக்கின்ற இந்தப் போரினால் பல உயிர்கள் அழிந்தாலும் ஒரே ஒரு வகையில் நாம் ஆறுதல் அடையலாம். அது சதாம் உசையினின் பிடியில் இருந்தும் சதாம் உசையினின் எதிர்கால சந்ததியின் பிடியில் இருந்தும் இன்னும் பல ஆயிரம் உயிர்கள் அழிவது தடுக்கப்பட்டுவிட்டது என்பதே ஆகும்.

**தன்மானம்**


போரின் விளைவுகளை உணர்ந்து ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு இனத்திலும் பணம் பண்ணுவதற்காக குலத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்புகள் உருவாகாமல் எம்மை நாம் பார்த்துக் கொள்வதே மனித இனத்திற்கு நாம் செய்யும் உதவியாகும். தன்மானத்துடன் நாம் வாழும் இடத்தில் அமெரிக்கா போன்ற வல்லூறுகளிடம் இருந்து எம்மைக் காத்துக் கொள்ள வழி கிடைக்கும்.

சிந்தனை தொடரும்

பரம் G. ஒரு சாதாரணமனிதன்


**VALLIN SUPER MARKET**

- Fresh Vegetables
- Meat
- Fish, Groceries Tamil Video & Audio Cassettes



**416-724-5453**

இவற்றுடன் இலங்கை, இந்திய, கனேடிய உணவுகளையும் தருகிறார்கள்



**A VALLIN TAKEOUT & CATERING**

**416-283-1260**

790 Military Trail, Unit #1, Scarborough, ON




**"...WHERE EVERYTHING IS A-1!"**

**A1 SWEETS & RESTAURANT**




**TAKE - OUT**
**DINE - IN**
**CATERING**




100% Vegetarian Indian Cuisine

*Enjoy our home-cooked taste!*
*Ask for our daily specials*

Special price 11, 12, 13 April Only

Introducing special New Sweets
For Dusserah &Diwali!



**TUESDAYSPECIAL**
- MAKKI KI ROTI
- SARSON KA
- SAAG & LASSI ($3.99)

note
- BUY 3 THALI GET 4TH ONE FREE
- SPEND MORE THAN $50.00 GET A GIFT

- Appetizers
- Main Dishes
- Side Orders
- Indian Breads
- Namkins
- Sweets
- Desserts
- Beverages
- Veggie Thali ($4.99 + tax)
- Channa Bhatura ($2.99 + tax)

**416-299-9424** **1-866-422-1322**

*3300 McNicoll Ave. (at Middlefield), Near Scarborough Sikh Temple*

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



கடந்த இதழ் தொடர்ச்சி

பிரியமானவர்களே, நான் யார்? இங்கே இப்போ எதற்காக வாழ்கின்றேன்? என் வாழ்வின் உண்மையான குறிக்கோள் என்ன, என்ற கேள்விகளுக்கு விடை காண சற்று முயற்சிப்போமா?

தறிகெட்டு ஓடும் உங்கள் சிந்தனையை முதலில் நெறிப்படுத்துங்கள். என் சரிதம் அல்லது என் கதை, என் வரைபடம் என்று முதல் ஒரு சுய அலசல் செய்து உங்களைப் பற்றிய சகலவற்றையும் எழுத ஆரம்பியுங்கள். காகிதத்தில் ஒரு கோடிட்டு உங்கள் நிறை குறைகளைப் பிரித்து எழுதுங்கள். நீங்கள் எழுதுவதை ஒருவருக்கும் காட்டத் தேவையில்லை. உங்கள் குணநலன், கேடுகளை எழுதுவது, நிச்சயம் உங்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

ஓ! நான் இப்படியா?
இப்படியெல்லாம் என் மனது சிந்திக்கின்றதே என்று நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். செய்து பாருங்கள்! ஆம்! எம்மைப் பரிசோதித்தால்தான் எம்மை நாம் உணரமுடியும். எமை உள்ளபடியே ஏற்று குற்றங்குறைகளை மன்னித்து, நேசிக்க முடியும். எம் பிழைகளை உணர்ந்து திருத்திக்கொள்ளவும் முடியும். எங்கள் பலவீனங்கள் எமக்குப் பரிச்சயப்பட்டவை. அவற்றைப் பற்றி எமக்குத் தெரியும். ஆனால் எமது நற்குணங்களை அடையாளங் காண்பது எமக்கு ஒரு கஷ்டமான சவாலாயிருக்கலாம். இதனால் அந்த பேரருட் சக்தியாம் இறைவனைப் பக்தியுடன் வணங்கி எமக்கு அமைந்திருக்கும் சூழலையும், உறவுகளையும், எம்மையும் உள்ளபடியே நன்றியுடன் ஏற்றுக் கொள்வோம். இறைவன் ஒரு பொறியாய் எமக்குள் உறைகின்றான். ஆனால் அறியாமையினால் நாம் ஒளியை வெளியே இருட்டில் எங்கெங்கெல்லாமோ அலைந்து திரிந்து தேடிக் களைக்கின்றோம். இப்படி எம்மிடமிருந்தே ஓடும் நாம் தன்னலமற்ற சேவை செய்து மற்றவர்களுக்கு உதவும் போது தான், எம்மையே கடைசியில் கண்டுபிடித்துக் கொள்கின்றோம்.

நாம் பயபக்தியுடன் இறைவனை வணங்கியவுடன் தெய்வீக அருள் எமை வழிநடத்த ஆரம்பிக்கின்றது. நாம் விரும்பும் வண்ணம் மட்டுமே எல்லாம் நடக்க வேண்டும் என நாம் எண்ணி வழிபடுவது உண்மையான பக்தி அல்ல. "கடவுளே இப்படிச் செய்! நான் அப்படிச் செய்கிறேன்" எனும் பண்டமாற்றுமுறை இப்போ எமக்குப் பழக்கமாகிவிட்டது. ஆனால் முழுமனதுடன் ஆயத்தமாய் உண்மையை உணர்ந்து ஏற்றுக் கொள்ளும் திறந்த மனதில்தான் இறையன்பும் பக்தியும் வளர்கின்றன. ஏற்கனவே எம் சூழலில் எமக்கு அமைந்திருப்பவற்றைத் திறந்த மனதுடன் முற்றுமுழுதாய் ஏற்றுக் கொள்ளும் செயல்தான் பக்தி.

இத்தகை பக்தியின் மகிமை தான் எப்போதும் நிறைந்திருக்கும் இறைவனின் சிறப்பும் அன்பும் எமை விசுவாசத்துடன் சத்தியப் பாதையில் வழிநடத்தும் சக்தி. ஒருபோதும் பயந்து பயந்து நாம் இறைவழிபாடு செய்யத் தேவையில்லை. ஆனால் எனக்கு ஒன்றும் சொல்லித் தரவேண்டாம்; எனக்கெல்லாம் தெரியும் என்ற இறுமாப்பு வந்தால் எமக்கு அந்த உண்மையை நிச்சயம் அறிய முடியாது. நாம் முயற்சி செய்யும்போது தான், எமக்குத் தேவையான மற்றவை சகலதும் ஏதோவிதமாக எமைத் தேடி வந்தடைகின்றன. "யாவும் உனது சித்தம் இறைவா", எனும் பூரண சரணாகதியே உண்மையான பக்தி. எம் ஆழ்மனதின் வழிபாடாகிய எமது ஆசைகள் தான் உண்மையான பேரின்பத்தையும் எம்மையும் பிரிக்கும் சுவர்கள் என்பதை மறக்க வேண்டாம்.

எமது ஆழ்மனதிலுள்ள கேடுகளைக் கவனமாக சீர்செய்ய ஆரம்பத்தோமானால் எமை நாமே நேசிக்க முடியும். எமை மதித்து, மரியாதை செலுத்தி எமக்குள்ளிருந்து பெருகும் அன்பின் அடிப்படையில் மற்றவர்களுடன் எமது உறவை வளர்த்தோமானால் வாழ்வின் சகல இன்பங்களும் தாமாகவே எமது மடியில் வந்து விழும். இதைத் தான் மீண்டும் மீண்டும் நான் கூற விரும்புகிறேன். உங்களுக்குள்ளிருந்து, உங்கள் மையத்திலிருந்து வெளிவந்து உங்களை நீங்களே நேசித்து மரியாதை செலுத்துங்கள். சிறுபொறியாய் உங்களுக்குள்ளும் இருக்கும் ஆண்டவன் இதைமட்டும் தான் உங்களிடம் கேட்கிறார். எமது ஆழ் மனதிலிருந்து வெளிவரும் சிந்தனைகள் உணர்வுகள் யாவற்றையும் அலசி ஆராய்ந்து, தீயவற்றை மாற்றியமைத்து உங்களை நீங்களே குணப்படுத்துங்கள். இவை காலத்தால் அழியாத கோட்பாடுகள். நான் சொல்வதை கவனமாய் அவதானித்து அவற்றை நீங்கள் கடைப்பிடித்தீர்களானால் உங்களைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் ஒரு புதிய விழிப்புணர்வு உங்களுக்கு ஏற்படுவது நிச்சயம். ஒவ்வொரு நாளும் தூங்கமுதல் உங்கள் பழைய சிந்தனை, ஆதங்கம், நம்பிக்கை, முடிவுகள், உடன்பாடுகள், உணர்வுகள், எடைபோடுதல் போன்றவற்றை அலசி விழிப்புணர்வுடன் அணுகுங்கள். உங்கள் பார்வையை மறைத்து தப்பான அபிப்பிராயங்களை அடையாளங்காண முயற்சி செய்யுங்கள்.

**லலிதா புரூடி**




வீடு விற்க, வாங்க, மற்றும் குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குபடுத்திக் கொள்ள, இலவச ஆலோசனைகளிற்கும் ஆகக் கூடிய வீடுகளை விற்கும் Re/Max வீட்டுப் பிரதிநிதி **"கேதா"**வை நாடுங்கள்.



தொடர்புகளிற்கு: **416.677.4707**
**416.491.4002**

**24 hrs**

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**

# SAFETY TRUCKS
## Training School Ltd.

**Training & Trucking** **Classes A, D & Z**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (9ஆம் ஆண்டு)

**We Accept Welfare & Unemployment Insurance**

வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.





**In Classes**
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**16 Years Canadian Experience with Trucks**

